

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தையொட்டி நேற்று (07.08.2023) புதுடெல்லி வைகை, பொதிகை தமிழ்நாடு இல்லங்களில் அலங்கரிக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிரிராஜன், வேலுச்சாமி, அப்துல்லா, பார்த்திபன், தமிழ்நாடு இல்லம் கூடுதல் உள்ளுறை ஆணையர் சின்னதுரை மற்றும் கூடுதல் இயக்குநர் பொ.முத்தையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஜம்முகாஷ்மீரில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை..!

ஸ்ரீநகர், ஆக. 8 –

ஜம்முகாஷ்மீர் மாநிலம் பூஞ்ச் மாவட்டத்தில் உள்ள திக்வார் துணைப் பகுதியில் உள்ள எல்லைக் கட்டுப் பாட்டுக் கோடு பகுதியில் பயங்கரவாதிகள் சிலர் பதுங்கியிருப்பதாக பாதுகாப்புப் படை யினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, பாதுகாப்புப் படையினர் மற்றும் ஜம்மு காஷ்மீர் காவல்துறை இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வந்தனர். அப்போது, அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் திடீரென பாதுகாப்புப் படையினரை நோக்கி துப்பாக்கியால் சுடத் தொடங்கினர். இதையடுத்து, சுதாரித்துக் கொண்ட பாதுகாப்புப் படை வீரர்கள் பதிலடி தாக்குதல் நடத்தினர்.

இறுதியில் இரு பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் பொன் புதுப்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில்

# 526 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்!

புதுக்கோட்டை, ஆக. 8 -

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஒன்றியம், பொன்.புதுப்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில், 526 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 05.08.2023 அன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது. பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது;

எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்றும், பெண்களை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் அடைய செய்வதும், அவர்களை முன்னிலை படுத்துவதும் என்ற திராவிட மாடல் அடிப்படையில் ஆட்சி செய்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய குடும்பங்க ளைச் சார்ந்த மாணவ, மாணவிகளுக்கும் உயர் தரத்திலான கல்வி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் எண்ணற்றத் திட்டங்களை மேற் கொண்டு வருகிறார்கள். அதன் ஒருபகுதியாக மேல்நிலை முதலாம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகள் உரிய நேரத்தில் பள்ளிக்கு வருகை தந்து படிப்பின் மீது முழுகவனம் செலுத்த வேண்டும் என்ற அடிப்படையில் உரிய காலத்திற்குள் விலையில்லா மிதிவண்டிகள் மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

அதன்படி இன்றைய தினம் பொன்.புதுப்பட்டி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 178 மாணவிகளுக்கும், வலம்புரி வடுகநாதன் மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 82 மாணவர்களுக்கும், 25 மாணவிகளுக்கும், மேலைச்சிவபுரி அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த 59 மாணவர்களுக்கும், 73 மாணவிகளுக்கும், ஆலவயல் அரசு மேல்நிலைப்பள்ளியைச் சேர்ந்த 51 மாணவர்களுக்கும், 58 மாணவிகளுக்கும் என மொத்தம் 526 நபர்களுக்கு ரூ.25,30,640 மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

மேலும் அரசுப் பள்ளிகளில் பயின்றுவரும் மாணவ, மாணவிகளுக்கு 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டின் கீழ், அனைத்து உயர்கல்வி பிரிவிலும் உயர்கல்வி பெறும் நிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே மாணவ, மாணவிகள் அனைவரும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மிதிவண்டிகளை படிப்பிற்காக முழுமையாக பயன்படுத்திக்கொண்டு தங்களது கல்வி செல்வம் ஒன்றே காலத்தால் அழிக்க முடியாத செல்வமாகும் என்ற அடிப்படையில் தங்களது எதிர்காலத்தை சிறப்பானதாக அமைத்துக்கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் த சுதா அடைக்கலமணி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம். மஞ்சுளா, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், புதுக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலர் ரமேஷ், பள்ளித் துணை ஆய்வாளர்கள் வேலுச்சாமி, குருமாரிமுத்து, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், வட்டாட்சியர் பிரகாஷ், பள்ளித் தலைமையாசிரியர் நிர்மலா, உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில்

# 6வது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா!

## அமைச்சர்கள் அன்பில் மகேஸ் பொய்யாமொழி - சிவ.வீ.மெய்யநாதன் பார்வையிட்டனர்!

## கே.கே.செல்லப்பாண்டியன் பங்கேற்பு!

புதுக்கோட்டை ஆக. 8 -

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, புதுக்கோட்டை நகர்மன்றத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து நடத்தும், 6வது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் 05.08.2023 அன்று விழா பேருரையாற்றி, புத்தகங்களை பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது.

புத்தகத் திருவிழா ஒருங்கிணைப்பு குழு சார்பில், ஞானாலயா பா.கிருஷ்ணமூர்த்தி, செம்பை மனவாளன், முனைவர் கே.ராஜா முகமது, துரை மதிவாணன், கரு.ராஜேந்திரன், ப.உமாபதி ஆகிய 6 நபர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர்களுக்கான விருதுகளை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் வழங்கி விழாப் பேருரையில் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளின் இந்த புத்தகத் திருவிழாவில் மாணவ, மாணவிகள் கலந்துகொள்வதன் மூலம் புத்தகங்கள் படிப்பதற்கு ஊக்கமளிக்கும். அதன்படி நடைபெறுகிற இந்த 6வது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா சிறப்பாக அமையப் பெற்றுள்ளது. இந்த புத்தகத் திருவிழாவினை மாணவ, மாணவிகள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் அவர்கள், மாணவ, மாணவியர்களின் நலனிற்காக எண்ணற்ற கல்வித் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விழா நிகழ்ச்சிகளில் பரிசாக புத்தகங்களை வழங்குவதற்கு அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பரிசாக பெறப்பட்ட புத்தகங்களை நூலகத்திற்கு வழங்கி உள்ளார்கள். என அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவிகளின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து நடத்தும் 6வது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இப்புத்தகத் திருவிழாவில் பல்வேறு தலைப்புகளின்கீழ் புத்தகங்கள் அரங்குகள் அமைக்கப்பட்டு புதுக்கோட்டை நகர்மன்றத்தில் 28.07.2023 முதல் 06.08.2023 வரை 10 நாட்கள் நடைபெற்று வருகிறது. எனவே இப்புத்தக திருவிழாவினை அனைத்துத்தரப்பு மக்களும் பயன்படுத்திக்கொண்டு, புத்தகங்கள் வாங்கி பயன்பெறலாம் என அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.மஞ்சுளா, நகர்மன்ற துணைத் தலைவர் எம்.லியாகத் அலி, டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், நகர்மன்ற உறுப்பினர் பால்ராஜ் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆ. சஞ்சீவிராயன்

ஆகஸ்ட் 8 (2021)



1964ஆம் ஆண்டு கழகத்தில் உறுப்பினராகி 55 ஆண்டுகளுக்கும் மேலாக கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாவட்டத்தில் எழும்பூர் மற்றும் திரு.வி.க.நகர் பகுதிகளில் 68வது வட்டம், 97வது வட்டம் ஆகிய வட்டச் செயலாளராகவும் மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

அமீரக தி.மு.க. பொறுப்பாளரும் அயலக தமிழர் நல வாரிய உறுப்பினருமான

# எஸ்.எஸ்.மீரானை விருது வழங்கி கவுரவித்த இந்திய தூதரகம்!

## சமூக சேவைக்கு கிடைத்த அங்கீகாரம்!

துபாய், ஆக. 8 -

அமீரக தி.மு.க. பொறுப்பாளரும், தமிழக அரசின் அயலக தமிழர் நல வாரிய உறுப்பினருமான எஸ்.எஸ். மீரா னின் சமூக சேவையை பாராட்டி துபாயில் உள்ள இந்திய தூதரகம் சார்பில் விருது வழங்கி கவுரவிக்கப் பட்டது.

துபாயில் உள்ள இந்திய தூதரகத்தில் கடந்த ஆகஸ்ட் 1ஆம் தேதி நடைபெற்ற விழாவில் இந்திய தூதர் (பொறுப்பு) ராம்குமார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தொழிலாளர் விவகார செயலாளர் அப்துல்லா லஷ்காரி ஆகியோர் இந்த விருதை வழங்கினர்.

பணி நிமித்தமாக ஐக்கிய அரபு அமீரகத்திற்கு சென்று அங்கு பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டவர்கள், போலி ஏஜெண்ட்கள் மூலம் துபாய்க்கு சென்று அங்கு ஊதியமும், சாப்பாடு கிடைக்காமல் தவித்தவர்கள் என பலருக்கும் அயலக தமிழர் நல வாரிய உறுப்பினர் என்ற முறையில் எஸ்.எஸ்.மீரான் உதவிக்கரம் நீட்டி வருகிறார்

அதுமட்டுமல்ல துபாயில் உயிரிழக்கும் தமிழ்நாட்டை சேர்ந்தவர்களின் உடல்களை சொந்த ஊருக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளையும் இந்திய தூதரகம் மற்றும் தமிழக அரசு அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொண்டு வருகிறார்.

துபாயில் உள்ள இந்திய தூதரகம் தன்னார்வமாக சமூகநலப் பணிகளில் இந்தியாவை சேர்ந்தவர்கள் ஈடுபடுவதன் மூலம் துபாயில் உள்ள இந்திய தூதரகத்தின் பணிச்சுமை குறைவது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே இவ்விழாவில் அமீரகத்தில் உள்ள பல்வேறு இந்திய முக்கிய பிரமுகர்களும், தொழிலதிபர்களும், சமூக செயற்பாட்டார்களும் கலந்து கொண்டனர்

மேலும் எஸ் எஸ் மீரான் அவர்களுக்கு கடந்த மே மாதத்தில் நியூஸ் 7 செய்தி சேனலில் எழுமின் விருது சமூக சேவைக்காக வழங்கப் பட்டது குறிப்பிடத்தக்கது

# தாய்மையும் கலைஞரும் ஒன்று!



தாய்மையும்
கலைஞரும்
ஒன்று

தாய் பேரன்பில்
பிள்ளைகளின் பெரும் பிழையையும்
ஏற்றுக்கொண்டு விடுவாள்

கலைஞரும் அப்படித்தான்
எதிரிகள்,
நண்பர்கள்,
மக்கள் செய்யும் பிழைகளையுமே
கூட பொறுத்துக்கொள்வார்

தாயும் கலைஞரும்
குற்றவாளிகள்தான்

சுடுமணலில் நாம் நின்றால்
செருப்பாக மாறினார்

புயலிலே சிக்கிய போது
கட்டுமரமாய் மாறி
கரை சேர்த்தார்

எளியவன் துயருற்றபோதெல்லாம்
அவனுக்கு துணை நின்றார்

மூச்சு விட சிரமப்பட்டபோது
உயிர்காற்றாய் உயிர் தந்தார்

எல்லாமே

யாரும்
கேட்காமலே

ஒரு தாயைப்போல
கலைஞரும் செய்தார்

அதனால்தானோ
என்னவோ

தாயின் அருமை பெருமை தெரியாத
தற்குறி பிள்ளைகள் போல

நாம் கலைஞரையும் அறியாமல்
போனோம்


காலம் கடந்துவிட்டது
கலைஞரும்
காற்றில் மறைந்து போனாலும்

தாயை இழந்து
இன்று
நினைத்து கதறும் பிள்ளைகளை
போல

கலைஞரை நினைத்து
கதறுது தமிழ் மக்கள் உலகு

**குளித்தலை மனோ**

# முத்தமிழறிஞர் கலைஞர் என்றும் முத்தமிழாய் வாழ்வார்!



1. ஐந்துமுறை தமிழகத்தை ஆண்ட நல்லோர் /
ஆற்றலுரு தளபதியை ஈன்ற வல்லோர் //
செந்தமிழ இனத்தையுமே நெஞ்சந் தாங்கிச் /
சிறப்பார்க்கும் பெரியாரின் வழியிற் சென்று //
சிந்தனையின் ஊற்றாகும் அண்ணா கொள்கை /
சிறிதளவும் மாற்றமின்றி நிலைக்க வைத்த //
முந்துதமிழ்ப் பற்றுடைய கலைஞர் என்றும் /
முகில்தமிழ நிலத்தினிலே வாழ்வார் என்றும் ! //

2. திருக்குறளிற் பற்றோடு நெஞ்சம் வைத்துத் /
தென்குமரி சிலைவைத்து நிலைக்கச் செய்து //
அரும்புலவர் வள்ளுவர்க்கே கோட்டம் கண்டார் /
ஆற்றலதன் உருமெனத் தோற்றம் கொண்டார் //
வருதமிழ இனப்பகையை வெற்றி கண்டு /
வளத்தோடு தமிழினத்தை வாழ வைக்கும் //
கருமுதலே தமிழூற்றம் கொண்ட சீரார் /
கலைஞருமே முத்தமிழ்போல் இசை யால் வாழ்வார் ! //

**புலவர் பழ.தமிழாளன்,**
இயக்குநர் பைந்தமிழியக்கம்,
திருச்சிராப்பள்ளி.



தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ”கலைஞரும் கலை உலகமும் என்கின்ற தலைப்பில் கருத்தரங்கு மாவட்ட அலுவலக தளபதி அரங்கில் நடைபெற்றது. தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் போர்வெல்.ராஜி வரவேற்புரையாற்றினார். மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை தலைவர் வாகை.சந்திரசேகர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கலைஞர் அவர்களின் சாதனைகள், கலைத்துறையில் அவர் ஆற்றிய சேவைகள் குறித்து சிறப்புரை ஆற்றினார்.கருத்தரங்கில் நகர செயலாளர் நாட்டான் மாது,மாவட்டப் பொருளாளர் வே.தங்கமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.ஜி.சேகர், ஐ.டி விங் கௌதம், உதயசூரியன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.